# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C – 34/2017**

**Deposition of Witness for Prosecution : P.W. 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயசித்ரா | Caste | : | |
| Father/Husband Name | : | செந்தில்முருகன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(A4 present. Other Accused Absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.03.2024**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டம் S.V மங்களம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.12.2011 ஆம் தேதியில் உசிலம்பட்டி தாலுக்கா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பிலிருந்தபோது, ராமர், த/பெ. கழுவத்தேவர், ஏ. புதுபபட்டி என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 176/2011, இதச பிரிவுகள் 454, 380 IPC படி வழக்கு பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ. 3**) ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தவகல் அறிக்கையின் அசல் மற்றும் புகாரினை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பினேன். வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளரின் விசாரணைக்கு ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் எழுத்து மூலமாக உள்ளது என்றால் சரிதான். புகாரில் அ.சா.1 தண்ணீர் பாய்ச்சவிட்டு தூங்கிவிட்டதாகவும் காலை 07.30 மணியளவில் பீரோவை பார்க்கும்போது

உடைக்கப்பட்டு அதில் உள்ள பொருட்கள் திருடப்பட்டுள்ளது என்ற வாக்கியம் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். வழக்கின் சம்பவம் சூரியன் மறைந்த பின்பும், சூரியன் உதிக்கும் முன்பு எப்போது நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதியானவர் அதிகாலை 01.00 மணியளவில் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்றுவிட்டு, இரவு 02.45 மணிக்கு வீட்டிற்கு வந்து அசதியாக தூங்கிவிட்டதாகவும், அதன்பின்னர் காலை 07.30 மணிக்கு பீரோ உடைக்கப்பட்டிருந்ததை பார்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.